# வாக்குத்தத்த பூமியில் புதியதோர் வாழ்க்கை

**யோசுவாவின் புத்தகம்** **எம்.எஸ்.வசந்தகுமார்**

பழைய ஏற்பாட்டின் ஆறாவது புத்தகமான யோசுவா, முதல் ஐந்து புத்தகங்களின் முடிவுரையாகவும், இதனைத்தொடர்ந்து வரும் புத்தகங்களுக்கான முன்னுரையாகவும் உள்ளது. கானான் தேசத்தைப்பற்றிய தேவனுடைய வாக்குத்தத்தங்களையும், இவற்றின் நிறைவேறுதலையும் வாஞ்சையோடு எதிர்பார்க்கும் மக்கள் இத்தேசத்திற்கு வரும் பிரயாணத்தையும் பற்றிய முதல் ஐந்து புத்தகங்களிலும் உள்ள சரித்திரத்திற்கு ஒரு முடிவுரையாக, மக்கள் வாக்குத்தத்த பூமியைக் கைப்பற்றி அதில் குடியிருப்பதை இப்புத்தகம் அறியத்தருகின்றது. அதேசமயம், இதனைத்தொடர்ந்து வரும் புத்தகங்களில் குறிப்பிடப்பட்டுள்ள இஸ்ரவேல் மக்களுடைய கானான் தேச சரித்திரத்தின் ஆரம்ப விஷயங்களை இப்புத்தகம் அறியத்தருகின்றது. அதாவது, இஸ்ரவேல் மக்கள் தனியான ஒரு ராட்சியமாகத் தேவன் கொடுத்த நாட்டில் குடியேறுவதை இப்புத்தகம் காண்பிக்கின்றது.

"யோசுவா" என்பது இப்புத்தகத்தின் பிரதான கதாபாத்திரத்தின் பெயராகும். மூலமொழியான எபிரேய வேதாகமத்திலும் இப்பெயரே உள்ளது. இப்பெயரின் அர்த்தம் "யாவே இரட்சிக்கிறார்" அல்லது "யாவே இரட்சிப்பு" என்பதாகும். "யாவே" என்பது பழைய ஏற்பாட்டில் தேவனுடைய பெயராக உள்ளது. கி.பி.16ம் நூற்றாண்டிலிருந்து இப்பெயரை "யெகோவா" என்று கிறிஸ்தவர்கள் உச்சரித்து வந்தனர். ஆனால் "யாவே" என்பதே தேவனுடைய பெயரின் சரியான உச்சரிப்பு முறை என்பதை எபிரேய மொழிவல்லுனர்கள் அறியத்தந்துள்ளனர். யுத்தத்தின் மூலம் கானான் தேசத்தைத் தேவன் இஸ்ரவேல் மக்களுக்குப் பெற்றுக்கொடுத்து (யோசு.10:14, 21:44) அவர்களை இரட்சிக்கிறவராக இருக்கின்றார் என்பதை இப்புத்தகமும், இதற்கு கொடுக்கப்பட்டுள்ள பெயரும் அறியத்தருகின்றது. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தேவன் தம்முடைய தண்டனையை நிறைவேற்றும் ஒரு ஊடகமாக யுத்தத்தை உபயோகித்தார். ஆனால் புதிய ஏற்பாட்டுக் காலத்தில் யுத்தங்களை இவ்வாறு வியாக்கியானம் செய்யமுடியாது. புதிய ஏற்பாட்டின் நிலைப்பாடு மத்தேயு 5:44-45ல் விளக்கப்பட்டுள்ளது.

யோசுவாவின் புத்தகம் சம்பவங்களை நேரில் கண்ட ஒருவரினாலேயே எழுதப்பட்டுள்ளது. இதனால்தான் "நாம்" "நாங்கள்" என்னும் சொற்கள் பலதடவைகள் இப்புத்தகத்தில் உபயோகிக்கப்பட்டுள்ளது. மேலும், ஆசிரியர் தன்னை மூன்றாம் நபரில் (படர்க்கையில்) எழுதும் வழக்கமும் அக்காலத்தில் இருந்தது. சம்பவங்கள் நடைபெற்று குறுகிய காலத்தில் இப்புத்தகம் எழுதப்பட்டுள்ளதை அறியத்தரும் விதத்தில் சில விஷயங்கள் "இந்நாள் வரைக்கும் இருப்பதாகக்" குறிப்பிடப்பட்டுள்ளது (யோசு4:9, 5:9, 6:25, 7:26, 8:28, 13:13, 15:63). இதிலிருந்து, புத்தகத்தின் பெரும்பாலான பகுதிகள் யோசுவாவினாலேயே எழுதப்பட்டுள்ளது என்பது தெளிவாகின்றது. எனினும் சில சம்பவங்கள் யோசுவாவின் மரணத்தின்பின்பே எழுதப்பட்டுள்ளன (அதாவது, யோசுவா எலெயேசர் என்பவர்களுடைய மரணம்). யூதர்களுடைய பாரம்பரியக் குறிப்புகளின்படி, யோசுவாவின் மரணம் எலெயேசரினாலும், எலெயேசரின் மரணம் பினெகாசினாலும் எழுதப்பட்டுள்ளது.

இஸ்ரவேல் மக்கள் எகிப்தில் அடிமைகளாக இருக்கும்போது யோசுவா பிறந்தான். பெற்றோர் இவனுக்கு "இரட்சிப்பு" என்று அர்த்தந்தரும் "ஓசேயா" என்னும் பெயரை வைத்தனர் (எண்.13:8). அடிமைத்தனத்திலிருந்த பெற்றோர், தேவன் தங்களுக்கு வாக்களித்த இரட்சிப்பை (அதாவது விடுதலையை) விசுவாசித்தவர்களாக இப்பெயரை வைத்துள்ளதாக வேதஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். மேலும், இவன் குடும்பத்தில் முதற் பிள்ளையாக இருந்ததினால் (1நாளா.7:20-27), தேவனுடைய வார்த்தையை விசுவாசித்த இவனுடைய பெற்றோர் பஸ்கா ஆட்டின் இரத்தத்தை வாசற்கதவில் பூசி வைத்திருந்ததினால், சங்காரத் தூதனிடமிருந்து பாதுகாக்கப்பட்டுள்ளான். பிற்காலத்தில் மோசே இவனுடைய பெயரை "யாவே இரட்சிக்கிறார்" என்று அர்த்தந்தரும் "யோசுவா" என்று மாற்றினான் (எண்.13:16). வாக்களிக்கப்பட்ட இரட்சிப்பு தேவன் மூலமாகவே கிடைக்கும் என்னும் நம்பிக்கையில் மோசே இவ்வாறு பெயரை மாற்றியுள்ளதாகக் கருதப்படுகின்றது. யோசுவா என்னும் எபிரேயப் பெயர் கிரேக்கத்தில் "ஈசொஸ்"


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London

(தமிழில் இயேசு) என்றே எழுதப்பட்டுள்ளது. அக்காலத்தில் பலருக்கு இப்பெயர் இருந்தது. ஆனால் இது மனிதனாக வந்த தெய்வத்திற்கு கொடுக்கப்பட்ட பின்னர் எவரும் தம் பிள்ளைகளுக்கு இப்பெயரைக் கொடுக்கவில்லை. எபிரேயர் நிருபத்தின்படி (அதி.4) இயேசுகிறிஸ்து யோசுவாவைவிட மேலானவராக இருப்பதனால், பெயரை அடிப்படையாகக் கொண்டு யோசுவாவை இயேசுகிறிஸ்துவுக்கு முன்னடையாளமானவ னாகக் கருதமுடியாது

எகிப்தில் அடிமையாகப் பிறந்த யோசுவா, தேவன் அனுப்பிய 10 வாதைகளையும், தங்களை மீட்பதற்காகத் தேவன் செய்த அற்புதங்களையும் கண்டவனாக இருந்தான். எகிப்திய தெய்வங்கள் உண்மையில் தெய்வங்களே அல்ல என்பதையும், கர்த்தர் மாத்திரமே உண்மையான தேவன் என்பதையும் அனுபவரீதியாகக் கண்ட மனிதனாக இவன் இருந்தான். இஸ்ரவேல் மக்களுடைய வனாந்திரப்பிரயாணத்தில் இவன் ஒரு யுத்தவீரனாக இருந்தான் (யாத்.17:8-16). அமலேக்கியருடனான யுத்தம், தேவன் யோசுவாவை எதிர்காலத்தில் பெரியதோர் பணிக்காகத் தெரிவு செய்துள்ளதையும், அதற்கான பயிற்சியை அளிப்பதையும் அறியத்தருகின்றது (யாத்17:14). இது யோசுவாவின் விசுவாசத்தையும், துணிவையும் தேவன் பரீட்சிக்கும் ஒரு சம்பவமாக இருந்துள்ளது.

யோசுவாவைத் தேவன் ஒரு தலைவனாக ஏற்படுத்தியிருந்தாலும், அதற்கு முன்னர் அவன் மோசேக்குப் பணிவிடைசெய்கின்ற ஒரு ஊழியனாக இருந்தான் (யாத்.24:13, யோசு.1:1). மோசே தேவனை சந்திக்க மலைக்குச் சென்றபோது யோசுவாவும் அவனோடு சென்றான் (யாத்.32:17). உண்மையில், அவன் தலைவனாக வருவதற்கு முன் தேவனையும் அவருடைய கட்டளைகளையும் தனிப்பட்டரீதியாக அறிந்துகொள்ள வேண்டியவனாக இருந்தான். மேலும், மோசே தேவனை வழிபடும் கூடாரத்தைக் காவல் பண்ணுகிறவனாகவும் (யாத்.33:11), மோசேயின் தலைமைத்துவத்தைக் கனம் பண்ணுகிறவனாகவும் யோசுவா இருந்தான் (எண்.12:28).

இஸ்ரவேல் மக்கள் வாக்குத்தத்த பூமியின் எல்லைக்கு வந்தபோது, கானானை வேவு பார்க்க அனுப்பப்பட்டவர்களில் யோசுவாவும் ஒருவன் (எண்.13). அனுப்பப்பட்ட பன்னிருவரில் பத்துப்பேர் கானானைக் கைப்பற்றமுடியாது என்னும் எண்ணத்தில் மக்களில் அவிசுவாசத்தை ஏற்படுத்தினார்கள். ஆனால் யோசுவாவும் காலேபும், மற்றவர்களைப்போல சூழ்நிலைக்கு ஊடாகத் தேவனைப் பார்க்காமல், தேவனுக்கு ஊடாக சூழ்நிலையைப் பார்த்தார்கள். இதனால், கானானைக் கைப்பற்ற முடியும் என்னும் நம்பிக்கை அவர்களுக்கு இருந்தது. மேலும், சரியானது எது என்பதை அறிந்திருந்த யோசுவா, பெரும்பான்மையினருடைய கருத்துக்கு எதிராக நிற்கத் தயங்கவில்லை. அவர்கள் தேவன் பக்கமாக இருந்ததினால், தாங்கள் இருவர் மட்டுமே இருக்கின்றோம் என்னும் பயம் அவனுக்கு இருக்கவில்லை. தங்களுக்கு முன் இருக்கும் யுத்தத்தைவிட தேவன் பெயரியவர் என்பதை அவன் அறிந்திருந்தான். மேலும், வாக்குத்தத்த பூமி கிடைப்பது தாமதமாகினாலும் யோசுவா பொறுமையோடு காத்திருந்தான். வெற்றியைப் பெறுவது எவ்வாறு என்பதை மாத்திரமல்ல, தோல்வியை எப்படி ஏற்றுக்கொள்ளவது என்பதையும் யோசுவா அறிந்திருந்தான்.

மோசேக்குப் பின் இஸ்ரவேல் மக்களை வழிநடத்துவதற்காகத் தேவன் யோசுவாவை நியமித்தார் (உபா.3:21-28, எண்.21:33-35, 27:12-23, உபா.3:23-29). யோசுவா எவ்வாறு இஸ்ரவேல் மக்களை வாக்குத்தத்த பூமிக்குள் வழிநடத்தி, அவர்களுக்கு அத்தேசத்தைப் பங்கிட்டுக் கொடுத்தான் என்பதை இப்புத்தகம் அறியத்தருகின்றது. இதில் நான்கு பிரதான பகுதிகள் உள்ளன:

1. அறிமுக உரை (யோசுவா 1:1-18).
2. கானான் தேசத்தைக் கைப்பற்றுதல் (2:1-12:24).
3. கானான் தேசம் பங்கிடப்படுதல் (13:1-21:45)
4. முடிவுரை: இறுதிச்சம்பவங்கள் (22:1-24:33).

## 1. அறிமுகவுரை (யோசுவா 1:1-18)

<u>1:1. யோசுவா தலைவனாக்கப்படுதல்:</u> மோசேயின் மரணத்தின்பின் தேவன் யோசுவாவை இஸ்ரவேல் மக்களின் தலைவனாக்கினார். யோசுவா மோசேயின் ஊழியக்காரனாக இருந்தவன். நமக்குப் பின் நம்முடைய ஊழியத்தைச் செய்வதற்கு


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London

மற்றவர்களை நாம் பயிற்றுவிக்கவேண்டியதன் அவசியத்தை இது காண்பிக்கின்றது. மோசேக்குக் கீழ் இருந்து பணிபுரிந்தவனே புதிய தலைவனாக்கப்பட்டான். தலைவன் வேறு எங்கிருந்தும் வரவில்லை. தேவனுடைய ஊழியம் எப்பொழுதும் தனியொரு மனிதனால் செய்யப்படுவதில்லை. தனக்குப் பின் ஊழியத்தைத் தொடர்ந்து செய்வதற்கு மக்களைப் பயிற்றுவிக்காதவர்களுடைய ஊழியம் அவர்களுடைய மரணத்தோடு இல்லாமற்போய்விடும் (2தீமோ.2:1-2 ஒப்பிடவும்).

1:2-9. தலைவனின் மறைவு பிரயாணத்தின் முடிவாக இருக்கவில்லை. எஞ்சியிருப்போர் பணியைத் தொடரவேண்டியது அவசியம். இதைப்பற்றி தேவன் யோசுவாவுக்கு கட்டளையிட்டார் (1:2). வாக்குத்தத்தம் கொடுத்தார் (1:3-6). தைரியப்படுத்தினார் (1:9). யோசுவா தேவன் கொடுத்த நியாயப்பிரமாணத்தின்படி வாழவேண்டியவனாக இருந்தான் (1:7-8).

1:10-18. தலைவனாக்கப்பட்ட யோசுவா, ஜனங்களின் அதிபதிகளிடம் செய்யவேண்டிய காரியங்களை அறிவித்தான் (1:10-15). அவர்களும் யோசுவாவின் கட்டளைக்கு கீழ்ப்படிந்து நடப்பதாக உறுதியளித்தனர் (1:16-18). இவ்வாறு மக்களுடைய அங்கீகாரத்தைப் பெற்றவனாகத் தலைவன் இருக்கவேண்டியது அவசியம்.

## 2. கானான் தேசத்தைக் கைப்பற்றுதல் யோசுவா 2:1-12:24.




<u>2:1-24. வேவுகாரர் அனுப்பப்படுதல்:</u> கானானைக் கைப்பற்றுவதற்கு முதலில் வேவுகாரர்களை எரிகோ பட்டணத்திற்கு யோசுவா அனுப்பினான். எரிகோ நகரத்தை இலகுவாகக் கைப்பற்றிவிடலாம் என்னும் செய்தியுடன் வேவுகாரர்கள் திரும்பிவந்தனர். எரிகோவில் ராகாப் என்னும் ஒரு விலைமாது வேவுகாரர்களைப் பாதுகாத்தாள். கானானியப் பெண்ணான இவள் இயேசு கிறிஸ்துவினுடைய வம்சவரலாற்றிலும் இடம்பெற்றுள்ளதோடு, புதிய ஏற்பாட்டுப் பக்தர்களின் விசுவாசத்திற்கான மாதிரியாகவும் காண்பிக்கப்பட்டுள்ளாள் (மத்.1:5, யாக்.2:25) இவளைப்பற்றிய விரிவான விபரங்களுக்கு எனது “ஒரு விலைமகள் விசுவாசியாகின்றாள்” என்னும் புத்தகத்தைப் பார்க்கவும்.

<u>3:1-4:24. வாக்குத்தத்தப் பூமிக்குள் செல்லுதல்:</u> யோர்தான் நதிக்குக் கிழக்கில் மோவாபிய சமவெளியில் இருந்த இஸ்ரவேல் மக்கள் நதியைக் கடந்து வாக்குத்தத்த பூமிக்குள் சென்றனர். யோர்தான் நதியை எவ்வாறு கடப்பது என்பதை அறியாதவனாக இருந்த யோசுவா, எப்படியும் அதைக் கடப்பதற்குத் தேவன் உதவி செய்வார் என்னும் நம்பிக்கையுடன் மக்களை நதிக்கரை வரை அழைத்து வந்தான் (3:5). தேவன் செங்கடலைப் பிளந்து வழியை உண்டாக்கியது போல, இங்கு யோர்தான் நதியையும் பிளந்து இஸ்ரவேல் மக்கள் கானானுக்குள் செல்வதற்கு உதவிசெய்தார். தேவன்


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London

மோசேயோடு இருந்ததுபோல, யோசுவாவோடும் இருப்பதை மக்கள் அறிந்துகொள்வதற்காக, அவர் செங்கடலைப் பிளந்தது போல யோர்தானையும் பிளந்து வழியை உண்டாக்கினார் (3:7). தேவன் செய்யும் அற்புதங்கள் இவ்வாறு குறிப்பட்ட நோக்கத்துடனேயே செய்யப்படும். இப்பொழுது மேகஸ்தம்பம் அவர்களை வழிநடத்தவில்லை. கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி அவர்களை வழிநடத்தியது. அக்காலத்தில் இப்பெட்டி தேவனுடைய பிரசன்னத்திற்கான அடையாளமாக இருந்தது. சகலரும் உடன்படிக்கைப் பெட்டியைப் பார்க்கக்கூடிய அளவு தூரத்தில் இருந்து மக்கள் அதைப் பின்பற்றிச் சென்றனர் (3:4). உடன்படிக்கைப் பெட்டி பற்றிய விபரங்களுக்கு யாத்.25:109-22, சங்.80:1, லேவி.16:14-15, எண்.10:35, 1சாமு.4-6, உபா.10:1-4, 10:8, 31:26, 1சாமு.6:7-12 பார்க்கவும். யோர்தான் நதியைக் கடந்த இஸ்ரவேல் மக்கள் எரிகோவின் சமவெளியைச் சென்றடைந்தார்கள்.

<u>5:1-14. சடங்காசாரச் சுத்திகரிப்பு:</u> எரிகோவின் சமவெளியில் இஸ்ரவேல் மக்கள் சடங்காசார ரீதியாகச் சுத்திகரிக்கப்பட்டார்கள். வனாந்திரத்தில் பிறந்த பிள்ளைகள் விருத்தசேதனம் செய்யாதவர்களாக இருந்ததினால், உடன்படிக்கையின் அடையாளமான (ஆதி.17:9-14) விருத்தசேதனம் அவர்களுக்குச் செய்யப்பட்டது (5:1-8). அதன்பின்னர் பஸ்கா ஆசரிக்கப்பட்டது (5:10). இது எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டதை நினைவுகூரும் பண்டிகையாக இருந்தது. இஸ்ரவேல் மக்கள் கானான் தேசத்தின் பயிரைச் சாப்பிட ஆரம்பித்த நாளின் பின்னர், அதுவரை காலமும் அவர்களுக்கு கிடைத்த மன்னா நிறுத்தப்பட்டது (5:11-12). தேவன் செய்கின்ற அற்புதங்கள் அவர் அவற்றிற்கு வைத்துள்ள நோக்கத்தின்படியே செய்யப்படுகின்றன என்பதற்கு இது இன்னுமொரு உதாரணமாக உள்ளது. மேலும், தேவனுடைய அற்புதம் மானிட பொறுப்புகளை இல்லாமலாக்குவதாகவும் அமைந்துவிடாது என்பதையும் மன்னா நிறுத்தப்பட்டது அறியத்தருகின்றது. வாக்குத்தத்த பூமிக்கு வந்த பின்னர் அவர்கள் மன்னாவை எதிர்பார்த்து அல்ல, வேலை செய்தே சாப்பிட வேண்டியவர்களாக இருந்தனர். இதுவே ஆரம்பத்திலிருந்து தேவன் மனிதனைப் பராமரிக்கும் முறையாக இருந்தது (ஆதி.2.15). வனாந்திரப் பிரயாண காலத்தில் இது சாத்தியப்படவில்லை. இதனால் தேவன் மன்னாவினால் அவர்களைப் போஷித்தார்.

வசனங்கள் 13-15ல் "கர்த்தருடைய சேனை" தேவதூதர்களைக் குறிக்கின்றது (1ராஜா.22:19, சங்.103:20-21, 148:2, லூக்.2:13, மத்.26:53, எபி.1:14). இவ்வசனங்களில் தேவனே யோசுவாவிற்குத் தரிசனமளித்துள்ளார். தேவனும், "சேனைகளின் கர்த்தர்" என்று வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளார். யோசுவா முகங்குப்புற விழுந்து பணிந்து கொள்வதும் இதை உறுதிப்படுத்துகிறது. மோசேக்கு தரிசனமளித்ததற்குச் சமனான தரிசனமாக இது உள்ளது. பழைய ஏற்பாட்டில் "கர்த்தருடைய தூதனானவர்" என்னும் பெயரில் தம்மை வெளிப்படுத்திய இயேசுகிறிஸ்துவே இங்கு கர்த்தருடைய சேனையின் அதிபதியாய் யோசுவாவுக்குத் தரிசனமளித்துள்ளார். இது யுத்தத்திற்கு யோசுவா ஆயத்தமாகிய சந்தர்ப்பமாக இருப்பதனால், சேனையின் அதிபதியாக இங்கு தேவன் தம்மை வெளிப்படுத்தியுள்ளார். உருவின பட்டயம் அவர் கையில் இருந்தது, யுத்தத்திற்கு தேவன் ஆயத்தமாயிருப்பதையும், கர்த்தர் இஸ்ரவேல் மக்களுக்காக யுத்தம் செய்வார் என்பதையும் அறியத்தருகின்றது. பழைய ஏற்பாட்டில் இத்தகைய தெய்வீக வெளிப்படுத்தல்கள் பல உள்ளன (ஆதி.18:1-8, 32:24-32, தானி.3:25).

<u>6:1-12:24 கானான் தேசத்தைக் கைப்பற்றுதல்:</u> அக்காலத்தில் கானான் தேசம் பல சிற்றரசர்களின் ஆட்சியின்கீழ் இருந்தது. இஸ்ரவேல் மக்கள் கானானைக் கைப்பற்றுவதற்கு நீண்ட காலம் எடுத்ததோடு (11:18) அவர்கள் பல யுத்தங்களில் ஈடுபடவேண்டியதாயிருந்தது (12:1-24). ஆனால் இவற்றில் நான்கு முக்கிய யுத்தங்கள் மட்டுமே இப்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றில் எரிகோ, ஆயி என்னும் இரு நகரங்களுக்கு எதிரான யுத்தம் இஸ்ரவேல் மக்களினால் ஆரம்பிக்கப்பட்டவை (6:1-27, 7:1-8:29). ஏனையவை கானானிய அரசர்களினால் ஆரம்பிக்கப்பட்டன. இவை கானானின் தென் பகுதியிலும் (10:1-43) வடபகுதியிலும் (11:1-15) நடைபெற்ற யுத்தங்களாகும். கானானின் மத்திய பகுதியில் எரிகோவிலும் ஆயியிலும் இஸ்ரவேல் மக்களுக்கு கிடைத்த வெற்றிகள், அவர்கள் கானானில் தங்களுடைய நிலையை உறுதிப்படுத்திக்கொண்டு தென் பகுதியையும் வடபகுதியையும் ஆக்கிரமிக்க உதவியது. இந்த யுத்தங்களில் எரிகோவுக்கும் கானானின் தென்பகுதிக்கும் எதிரான யுத்தங்கள் நேரடியாகத் தேவனுடைய தலையீட்டினால் இஸ்ரவேல் மக்களுக்கு கிடைத்த வெற்றிகளாக உள்ளன. ஆனால் வடபகுதிக்கான யுத்தங்கள் திறமைமிக்க யுத்த தந்திரத்தினால் கிடைத்த வெற்றிகளாக உள்ளன. கிறிஸ்தவ வாழ்விலும்


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London

இவ்வாறே வெற்றிகள் தேவனுடைய அற்புத செயல்களையும், மானிட முயற்சிகளையும் உள்ளடக்கியுள்ளது. நாம் ஒன்றிற்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்து மற்றதை அலட்சியப்படுத்தும் நிலையில் இருக்கக்கூடாது.

<u>6:1-27. எரிகோ கைப்பற்றப்படுதல்:</u> எரிகோ யோர்தான் நதிக்கு மேற்கே 5 மைல்கள் தொலைவிலும், சாக்கடலுக்கு ஏழு மைல்கள் வடக்கிலும் இருந்த நகரம். இதனுடைய நிலப்பரப்பு ஏறக்குறைய 8 ஏக்கர் அளவாக இருந்தது. தற்காலத்தில் "தெல் எல்-சுல்தான்" என்னும் பெயரில் ஒரு நகரம் இவ்விடத்தில் இருக்கின்றது. யோசுவாவின் காலத்தில் இந்நகரம் பலமான கோட்டைகளைக் கொண்டிருந்தது. இஸ்ரவேல் மக்கள் நகரத்தைத் தாக்க வருவதை அறிந்த எரிகோ அரசன் கோட்டைக் கதவுகளைப் பூட்டி வைத்திருந்தான் (6:1). தேவனோ, ஏழு நாட்களுக்கு நகரத்தைச் சுற்றிவரும்படி இஸ்ரவேல் மக்களுக்கு கூறியதோடு, ஏழாவது நாளில் ஆசாரியர்கள் எக்காளம் ஊத மக்கள் ஆரவரிக்க நகரத்தின் கோட்டைகள் இடிந்து விழப்பண்ணினார். யோசுவாவினதும் மக்களினதும் விசுவாசத்தைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காகவே தேவன் இவ்வாறு செய்யும்படி கட்டளையிட்டார் (எபி.11:30). எரிகோ நகரத்தைக் கைப்பற்றிய இஸ்ரவேல் மக்கள் வேவுகாரர் ராகாபுக்கு கொடுத்த வாக்குறுதியின்படி அவளையும், அவளுடைய குடும்பத்தினரையும் தவிர மற்ற அனைவரையும் அழித்தனர். இஸ்ரவேல் மக்களுடைய ஆரவார சத்தமே எரிகோவின் மதிலை இடித்து வீழ்த்தியது என்னும் சிலரது கருத்து தவறாகும். மக்கள் ஆரவரிப்பதற்கும் முன்பே தேவன் எரிகோ நகரத்தை அவர்களுக்கு கொடுத்து விட்டதாகத் தெரிவித்துள்ளார் (6:2). மேலும் இங்கு மக்களைத் துதிக்கும்படியும் தேவன் கூறவில்லை. ஆர்ப்பரியுங்கள் என்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொல் மூலமொழியில் சத்தமிடுங்கள் என்றே உள்ளது. இது பலமான சத்தமாகவே உள்ளது. மேலும் யுத்த வெற்றிகளில் மக்கள் இத்தகைய சத்தத்துடன் அல்ல, வெற்றியைப்பற்றிய பாடல்களைப்பாடியே தேவனைத் துதித்துள்ளதைப் பழைய ஏற்பாட்டில் நாம் காணலாம் (யாத்.15, நியாய.5). மேலும், இங்கு மக்கள் ஆறுநாட்கள் நாளொன்றுக்கு ஒரு தடவையும் ஏழாவது நாளில் ஏழு தடவைகளும் நகரத்தைச் சுற்றி வரவேண்டியவர்களாகவும் இருந்தனர். மானிட பார்வையில் இது யுத்தம் செய்வதற்கு ஏற்ற முறை அல்ல. ஆனால், இங்கு மானிட செயலில் அல்ல தேவனுடைய செயலிலேயே வெற்றி கிடைப்பதை அவர்கள் அறிந்து கொள்வதற்காகத் தேவன் அவர்களை இவ்வாறு செய்யச் சொன்னார். இஸ்ரவேல் மக்கள் பண்டிகைக் காலங்களில் எக்காளங்கள் ஊதுவது வழக்கம். இது தேவனுடைய பிரசன்னத்திற்கான அடையாளமாக இருந்தது (எண்.10:10). எரிகோவின் யுத்தத்தில் தேவன் இருப்பதைக் காண்பிப்பதற்காக எக்காளங்களை ஊதும்படி தேவன் கட்டளையிட்டார். எரிகோவின் மதில் மக்களுடைய சத்தத்தினால் அல்ல, தேவனுடைய வல்லமையினாலேயே விழுந்தது. ஏழுநாட்களும் அதைச் சுற்றிச் சென்ற இஸ்ரவேல் மகக்ள் தேவன் இதைச் செய்வார் என்று விசுவாசித்தார்கள் என்பதை எபிரேயர் 11:30 அறியத்தருகின்றது. மேலும், யோசுவா 6:24ன் வார்த்தைகள் நிறைவேறியுள்ளதை 1ராஜாக்கள் 16:34ல் நாம் காணலாம்.

<u>7:1-26 ஆயி பட்டணத்தில் தோல்வி:</u> எரிகோவின் வெற்றியைத் தொடர்ந்து இன்னுமொரு வெற்றிக்குப் பதிலாக ஆயி என்னும் பட்டணத்தில் இஸ்ரவேல் மக்கள் தோல்வியடைந்தனர். இது எரிகோவிலிருந்து 10 மைல்கள் வடமேற்கே இருந்த பட்டணம். இங்கு ஆகான் என்னும் ஒரு மனிதனின் பாவம் முழு சமுதாயத்தையும் பாதித்தது (7:1). இது தேவனுடைய கட்டளையை மீறிய ஒரு செயலாக இருந்தது (6:17-19 பார்க்கவும்). இதனால், இலகுவாக வெற்றி பெறக்கூடிய பட்டணத்தில் (7:2-3) அவர்கள் தோல்வியடைந்தனர் (7:4-5). மேலும், வேவுகாரரின் ஆலோசனையும் தவறானதாகவே இருந்தது. அவர்கள் எதிரியினுடைய பலத்தைக் குறைவாகவும், தங்களுடைய பலத்தை அதிகமாகவும் மதிப்பிட்டனர் (8:1, 8:25 ஒப்பிடவும்). தங்களுக்கு எப்பொழுதும் வெற்றியே கிடைக்கும் என்னும் எண்ணத்துடன் இருந்த இஸ்ரவேலருக்கு இது மிகப்பெரிய அதிர்ச்சியையும் சோர்வையும் ஏற்படுத்தியது. தோல்விபற்றி யோசுவா கர்த்தரிடம் முறையிட்டபோது (7:6-9), தோல்வியின் காரணத்தைத் தேவன் வெளிப்படுத்தினார் (7:10-11). அத்தோடு அவர்கள் வெற்றி பெறுவதற்கு என்னசெய்ய வேண்டும் என்பதையும் அறிவித்தார் (7:12-15). 6ம் வசனம் அக்கால மக்கள் அழுது புலம்பும் முறையாக உள்ளது (யோபு.1:20, 2:12 ஒப்பிடவும்). தன்னுடைய முறையீட்டில் யோசுவா தேவன்மீதும் குற்றம் சாட்டுபவனாக இருந்ததோடு, ஆரம்பத்தில் துர்ச்செய்தி கொண்டுவந்த வேவுகாரருடைய மனநிலையிலேயே இருந்தான் (எண்.14:2-3 ஒப்பிடவும்). ஆனால் தேவனுடைய வார்த்தைகள் தோல்வியின் காரணம் தேவனில் அல்ல, இஸ்ரவேல் மக்களில், அவர்களுடைய பாவத்திலேயே


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London

உள்ளது என்பதைச் சுட்டிக்காட்டியது. அப்பாவம் நீக்கப்பட்டு மக்கள் சுத்திகரிக்கப்படும்வரை வெற்றி சாத்தியமில்லை என்பதைத் தேவனுடைய வார்த்தைகள் அறியத்தருகின்றன. இதன்படி, தோல்வியின் காரணம் கண்டறியப்பட்டு, குற்றவாளி தண்டிக்கப்பட்டான் (7:16-26). குற்றவாளியைக் கண்டுபிடிப்பதற்குத் தேவன் கூறிய முறை நீண்ட நேரம் எடுக்கும் முறையாக இருந்தது (7:16-19). குற்றவாளியை அறிந்திருந்த தேவன் அதை வெளிப்படுத்தவில்லை. அதைக் கண்டுபிடிக்கும் முறையை யோசுவாவுக்கு அறிவித்திருந்தார். காரணம், நீண்ட நேரம் எடுக்கும் இம்முறை குற்றவாளி மனந்திரும்பி தானே தன்னுடைய குற்றத்தை அறிக்கையிட்டு மன்னிப்புக்காக மன்றாடுவதற்கு அவனுக்கு அவகாசத்தைக் கொடுத்தது. ஆனால் அவன் கண்டுபிடிக்கப்படும் வரை மனந்திரும்பவில்லை. கடைசியில் அவன் தன் குற்றத்தை ஒத்துக் கொண்டாலும் அவன் அதற்காக மனவருத்தப்படவில்லை. இங்கு சீட்டுப் போடும் முறையில் குற்றவாளி கண்டு பிடிக்கப்பட்டான் (நீதி.16:33 ஒப்பிடவும்).

<u>8:1-35. ஆயி பட்டணம் கைப்பற்றப்படுதல்:</u> பாவத்திற்கான பரிகாரம் செய்யப்பட்ட பின்னர் தேவன் ஆயி பட்டணத்தை இஸ்ரவேலரின் கையில் கொடுத்தார். ஆகானின் பாவமே தோல்விக்குக் காரணமாக இருந்தபோதிலும், எதிரியைப்பற்றிய அவர்களுடைய குறைவான மதிப்பீடும் தோல்விக்கான ஒரு காரணமாகவே இருந்தது. இதனால் சகல போர்வீரரையும் யுத்தத்தில் ஈடுபடுத்தும்படி தேவன் கூறினார் (8:1). எரிகோவில் சகலவற்றையும் அழிக்கும்படி கூறிய தேவன் ஆயியில் பொருட்களை எடுத்துக் கொள்ளும்படி கூறினார் (8:2). ஆகான் தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்திருந்தால் இப்போது அவன் விரும்பியதை எடுத்திருக்கலாம். மேலும், எரிகோவின் வெற்றியைப் போல ஆயியின் வெற்றி இருக்கவில்லை. எரிகோவில் நடந்த அற்புதங்கள் ஆயியில் நடைபெறவில்லை. இங்கு சாதாரண ஒரு யுத்தத்தில் எப்படி பேரிட்டு மனிதர்கள் வெற்றிபெறுவார்களோ அவ்விதமாகவே இஸ்ரவேலர் வெற்றியடைந்தனர். அற்புதங்கள் செய்யும் தேவன் சில சந்தர்ப்பங்களில் சாதாரண முறைகளில் நம்மை வழிநடத்துகிற வராக இருக்கின்றார் (8:3-29). யுத்தத்தின்முடிவில், யோசுவா கர்த்தருக்குப் பலி செலுத்தியதோடு, மக்கள் கேட்கும்படி நியாயப்பிரமாணத்தை வாசித்து, தேவனுடைய உடன்படிக்கைக்கு மக்கள் கீழ்ப்படியவேண்டியதன் அவசியத்தை உணர்த்தினான் (8:30-35).

<u>9:1-27. கிபியோனியரின் தந்திரம்:</u> எரிகோ, ஆயி என்னும் இரு பட்டணங்களின் வெற்றியின் பின்னர், கானானின் ஏனைய பட்டனங்களின் அரசர்கள் இஸ்ரவேலருக்கு எதிராக யுத்தம் பண்ண ஒருமனப்பட்டனர் (9:1-2). ஆனால் ஆயிக்கு ஆறு மைல்கள் தென்மேற்கே இருந்த கிபியோனியர், இஸ்ரவேல் மக்களை யுத்தத்தில் மேற்கொள்ள முடியாது என்பதை அறிந்து, தந்திரமான முறையில் அவர்களோடு சேர்ந்துகொண்டனர் (9:3-15). எனினும், இவர்கள் யார் என்பதை இஸ்ரவேல் மக்கள் அறிந்துகொண்ட போதிலும், தாங்கள் இவர்களுக்குத் தீங்கு செய்வதில்லை என்று ஏற்கனவே வாக்களித்திருந்ததினால், இவர்களை ஒன்றும்செய்யமுடியாமற்போய்விட்டது (9:16-21). இதனால் இவர்களை இஸ்ரவேல் மக்கள் அழிக்காமல் அடிமைகளாக வைத்துக் கொண்டனர் (9:22-27). கிபியோனியர் தாங்கள் தூரதேசத்திலிருந்து வந்தவர்கள் என்று சொன்னதற்குக் காரணம், அவர்கள் உபாகமம் 20:10-18 7:1-2ஐ அறிந்திருந்ததேயாகும். இதேவிதமாகத் தங்களுக்குத் தேவனைப்பற்றித் தெரியும் என்னும் அறிமுகத்துடன் கிறிஸ்தவ சபைகளில் வரும் வஞ்சகர்களைக் குறித்து நாம் கவனமாக இருக்க வேண்டும். இஸ்ரவேல் மக்களுக்காகத் தேவன் செய்த சில காரியங்களைக் கூறும் கிபியோனியர் (9:10), சமீபத்தில் இஸ்ரவேல் மக்களுக்கு கிடைத்த வெற்றிகள் தங்களுக்குத் தெரியும் என்பதை மறைத்து விட்டனர். இது தாங்கள் அதிக தொலைவிலிருந்து வருகின்றோம் என்னும் பொய்யை முரண்படுத்தும் என்பதனாலேயே அவர்கள் இவ்வாறு செய்துள்ளனர். இவர்களுடைய பேச்சில் ஏமாறிய இஸ்ரவேலர்கள் அச்சந்தர்ப்பத்தில் தேவனுடைய ஆலோசனையைத் தேடாதவர்களாக இருந்தனர் (9:14). எனினும், கிபியோனியரைக் காப்பாற்றுவதாக யோசுவா அவர்களுக்குக் கர்த்தருடைய நாமத்தில் ஆணையிட்டுக் கொடுத்ததினால், இஸ்ரவேல் மக்கள் அவர்களுக்கு தீங்கு எதுவும் செய்யவில்லை. தேவனுடைய பெயரில் செய்யப்பட்ட ஆணையை மீறுவது, அவருடைய கோபத்துக்கு உள்ளாகும் செயல் என்பதை 2சாமுவேல் 21:1-6 அறியத்தருகிறது. கொடுத்த வாக்குக்கு உண்மையுள்ளவர்களாக இருக்கவேண்டியது அவசியம். கிபியோனியரைப் பொறுத்தவரை அவர்களுடைய செயலுக்கு ஏற்ற தண்டனை கொடுக்கப்பட்டது. அவர்கள் நினைத்தவிதமாக அவர்களால் சுயாதீனமாக வாழ முடியவில்லை. அவர்கள் இஸரவேலுக்கு அடிமைகளாக்கப்பட்டனர்.


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London

10:1-43. தென்பகுதி அரசுகளுடனான யுத்தம். கிபியோனியர் இஸ்ரவேலரோடு சேர்ந்து கொண்டதை அறிந்த எருசலேமின் அரசன் கானானின் தென்பகுதியிலிருந்த இன்னும் நான்கு அரசர்களுடன் கிபியோனியருக்கு எதிராக யுத்தம் செய்ய முற்பட்டான் (10:1-5). கிபியோனியர் யோசுவாவிடம் முறையிட, இஸ்ரவேல் மக்கள் அந்த அரசர்களையும் யுத்தத்தில் மேற்கொண்டனர் (10:6-10). அத்தோடு தேவனும் கல்மழையைப் பொழியப்பண்ணி, எதிரிகளை அழித்து கிபியோனியரைக் காப்பாற்றினார் (10:7). சூரியனும் ஒரு பகல் முழுவதும் நடுவானத்தில் நின்றது (10:12-14). யோசுவாவின் விண்ணப்பத்தைக் கேட்டு தேவன் பூமியின் சுற்றுவேகத்தைக் குறைத்ததினால் யுத்தம் செய்வதற்கு நீண்ட நேரம் கிடைத்தது. சூரியன் நின்றதாகக் கூறுவது விஞ்ஞானத்தை முரண்படுத்தும் கூற்று அல்ல. இது காட்சிகளை மானிடக் கண்களுக்குத் தென்படும் விதத்தில் குறிப்பிடும் முறையாகும். விஞ்ஞான உலகிலும் மனிதர் இவ்வாறே சூரிய உதயம், அஸ்தமனம் என்னும் வார்த்தைகளை உபயோகிக்கின்றனர். சூரியனும் சந்திரனும் கானானிய மக்களின் தெய்வங்களாக இருந்தன. அவற்றின்மீதும் இஸ்ரவேலின் தேவன் வல்லமையுள்ளவர் என்பதை இச்சம்பவம் சுட்டிக்காட்டுகிறது. தென்பகுதியின் ஐந்து ராஜாக்களும், அவர்களின் படைகளும் அழிக்கப்பட்டன. இது தெய்வீக மானிட செயற்பாடுகளைக் கொண்ட யுத்தமாக உள்ளது (10:15-27). அதன்பின்னர் அவர்களுடைய பட்டணங்களும் கைப்பற்றப்பட்டன. எனினும், எருசலேம் யார்மூத் என்னும் இருபட்டணங்களும் கைப்பற்றப்படவில்லை. (10:28-43). உண்மையில், எருசலேம் பிற்காலத்தில் தாவீதினாலேயே கைப்பற்றப்பட்டது (2சாமு.5:7).

11:1-15. வடபகுதி அரசுகளுடனான யுத்தம். கானானின் தென்பகுதியை இஸ்ரவேல் மக்கள் ஆக்கிரமித்ததை அறிந்த வடபகுதி அரசர்கள் ஒன்றுசேர்ந்து திரளான படையோடு இஸ்ரவேல் மக்களுக்கு எதிராக யுத்தத்திற்கு வந்தார்கள் (11:1-5). அவர்களை இஸ்ரவேலரின் கையில் ஒப்புக்கொடுப்பேன் என்னும் தேவனுடைய வார்த்தையை விசுவாசத்தோடு ஏற்றுக்கொண்ட யோசுவா, தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து, அவர் சொன்ன காரியங்கள் அனைத்தையும் செய்து யுத்தத்தில் வெற்றியடைந்தான் (11:6-12). குதிரைகளின் குதிகால் நரம்புகளை அறுக்கும்படி தேவன் சொன்னதற்கு இரண்டு காரணங்கள் இருப்பதாகக் கருதப்படுகின்றது. ஒன்று குதிரை கானானியரின் தெய்வங்களில் ஒன்றாக இருந்தது. இரண்டு, இஸ்ரவேல் மக்கள் யுத்தத்தில் வெற்றி பெறுவதற்கு குதிரைகளை நம்பிவிடக்கூடாது (சங்.20:7). தங்களை எதிர்த்து வந்த அரசர்களையும் அவர்களுடைய படைகளையும் அழித்த பின்னர், கானானின் வடபகுதியிலிருந்த பட்டணங்களையும் இஸ்ரவேலர் கைப்பற்றினார்கள் (11:13-15).

11:16-12:24. இதுவரையில் இஸ்ரவேல் மக்கள் கைப்பற்றிய பிரதேசங்களும், அழித்த அரசர்களும் பற்றிய சுருக்க விவரணம்.

## 3. கானான் தேசம் பங்கிடப்படுதல் (13:1-21:45)

இஸ்ரவேல் மக்கள் கைப்பற்றிய பிரதேசங்கள் அவர்களுடைய கோத்திரங்களின் அடிப்படையில் பங்கிடப்பட்டன. யோசுவா இப்பொழுது வயது முதிர்ந்தவனாக இருந்ததினால் இதுவரையில் கைப்பற்றிய பிரதேசங்களைப் பங்கிடும்படி தேவன் யோசுவாவுக்கு கட்டளையிட்டார் (13:1). எனினும், இன்னும் அவர்கள் கைப்பற்ற வேண்டிய பிரதேசங்கள் இருந்தன. இவைகள் பிற்காலத்தில் இஸ்ரவேல் மக்களுக்கு கொடுக்கப்படும் என்றும் தேவன் யோசுவாவிற்கு வாக்களித்தார் (13:2-6).

வயதுமுதிர்ந்த யோசுவா இனி யுத்தம் செய்யக்கூடிய நிலையில் இருக்கவில்லை. யோசுவா மரிக்கும் போது 110 வயதுடையவனாக இருந்ததினால் (24:29), இப்போது ஏறக்குறைய 100 வயதுடையவனாக இருந்திருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். நம்மால் செய்யக் கூடிய அளவு வேலையைத்தான் தேவன் நமக்குத் தருவார். ஏனையவற்றைத் தேவன் மற்றவர்கள் மூலமாகச் செய்வார். எனவே, எல்லாவற்றையும் நாமே செய்யவேண்டும் என்னும் எண்ணத்துடன், எல்லாவற்றையும் நாமே செய்ய முற்பட்டு, கடைசியில் எதையும் ஒழுங்காகச் செய்து முடிக்காத நிலையில் இருப்பதைவிட, தேவன் நமக்கு கொடுத்துள்ள பணியை ஒழுங்காகச் செய்து முடிப்பதே நல்லது.


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London

7ம் வசனத்தில் “இந்தத்தேசம்” என்பது யோர்தான் நதிக்கு மேற்குப் பகுதியில் உள்ள பிரதேசமாகும். இப்பகுதி ஒன்பது கோத்திரத்திற்கும் மனாசே கோத்திரத்தில் 50 வீதத்தினருக்கும் கொடுக்கப்பட்டது (13:7). யோர்தான் நதிக்கு கிழக்குப்பகுதி ஏற்கனவே, மோசேயின் காலத்தில், மனாசேயில் 50 வீதத்தினருக்கும், ரூபன் மற்றும் காத் என்னும் கோத்திரங்களுக்கும் கொடுக்கப்பட்டிருந்தது (13:8-32). எண்ணாகமம் 32 ஒப்பிடவும். லேவி கோத்திரத்திற்கு நிலம் கொடுக்கப்படவில்லை (13:14, 33). ஆசாரிய ஊழியம் செய்வதற்காகத் தெரிவு செய்யப்பட்ட இக்கோத்திரத்தினர், ஏனைய கோத்திரத்தினர் கொடுக்கும் தசமபாகத்தினால் போஷிக்கப்படும் வழிமுறையைத் தேவன் ஏற்படுத்தியிருந்தார்.




© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London

14:1-33. யோர்தான் நதிக்கு கிழக்குப் பகுதி ஒன்பதரைக் கோத்திரத்துக்குச் சீட்டுப் போட்டு, மக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ற அளவில் பங்கிடப்பட்டது. ஏனைய கோத்திரங்களுக்கு ஏற்கனவே கொடுக்கப்பட்டவையும் மறுபடியுமாகச் சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது (14:1-5). ஆரம்பத்தில் நல்ல செய்தி கொண்டுவந்த காலேபுக்கு மோசே வாக்களித்திருந்தபடி எபிரோன் தேசம் கொடுக்கப்பட்டது (14:6-33, 15:13-19).

15:1-12, 20-63. யூதா கோத்திரத்துக்கு கொடுக்கப்பட்ட பிரதேசத்தின் விபரம். எபூசியரை இவர்களினால் துரத்திவிடக்கூடாமலிருந்தது.

16:1-10. எப்பிராயீம் கோத்திரத்தாருக்கு கொடுக்கப்பட்ட பிரதேசம். இவர்கள் காசேரில் குடியிருந்த கானானியரைத் துரத்திவிடவில்லை.

17:1-13. மனாசே கோத்திரத்திற்கு கொடுக்கப்பட்ட பிரதேசம். இவர்கள் தங்களுடைய பிரதேசத்திலிருந்து கானானியரைத் துரத்திவிடவில்லை. எப்பிராயீமும் மனாசேயும் கானானியரைக் கப்பம் கட்டுகிறவர்களாக வைத்துக்கொண்டது (16:10, 17:13), இவர்களினால் கானானியரைத் துரத்தக் கூடியதாக இருந்தும் அவர்கள் அதைச் செய்யவில்லை என்பதையே காட்டுகிறது. அவர்கள் மூலம் பொருளாதார நன்மை கிடைக்கும் என்பதற்காக அவர்களைக் கப்பம் கட்டுகிறவர்களாக வைத்துக் கொண்டனர். துரத்திவிடவேண்டியவைகளிடமிருந்து பலன் பெறமுற்படுவதும், அவற்றைத் துரத்தாமலிருப்பதும் ஆவிக்குரிய வாழ்வுக்குப் பாதிப்பாகவே அமையும்.

17:14-18. எப்பிராயீமும் மனாசேயும் தங்களுக்கு கொடுக்கப்பட்ட நிலம் போதாது என்றும் யோசுவாவிடம் முறையிட்டனர். எனினும், அவர்கள் காடுகளை வெட்டி குடியிருப்புப் பிரதேசங்களாக மாற்றவும், கானானியரைத் துரத்திவிடவும் வேண்டியவர்க ளாயிருந்தனர். இக்கோத்திரத்தாரின் கோரிக்கை காலேபினுடைய கோரிக்கை போல தென்பட்டாலும் (14:6-15), காலேப் தான் கேட்ட இடத்திலுள்ள மக்களைத் தன்னால் துரத்திவிட முடியும் என்னும் விசுவாசத்துடன் கேட்டான். ஆனால் அவர்கள், கானானியரிடம் இருப்புரதங்கள் இருந்ததினால் அவர்களைத் தங்களால் துரத்திவிட முடியாது என்னும் பயத்துடன் கேட்கப்பட்ட கோரிக்கையாகவே உள்ளது. இஸ்ரவேல் மக்கள் வாக்குத்தத்த பூமியைச் சுதந்தரித்துக் கொள்வதற்கு விசுவாசத்துடன் செயல்படவேண்டியதாயிருந்தது.

18:1. ஏனைய கோத்திரங்களுக்கு நிலம் பங்கிட்டுக் கொடுக்கப்படுவதற்கு முன்னர், ஆசரிப்புக்கூடாரத்தை சீலோ என்னும் இடத்தில் வைத்தார்கள். இவ்விடம் வாக்குத்தத்த பூமியின் மையத்தில் இருந்தது. தேவனை சேவிப்பதன் மூலமே அசீர்வாதமும் வளமும் கிடைக்கும் என்பதை உணர்த்துவதற்காக ஆசரிப்புக்கூடாரத்தை சீலோவில் வைக்கும் பணிகளுக்கு அச்சந்தர்ப்பத்தில் முதலிடம் கொடுக்கப்பட்டது.

18:2-10. இஸ்ரவேல் மக்கள் இப்பொழுது யுத்தத்தினால் களைத்துப் போனவர்களாக, மிகுதியான நிலத்தைப் பகிர்ந்து கொள்வதில் ஆர்வமற்றவர்களாக இருந்தனர். இவர்களைக் கடிந்துகொள்ளும் யோசுவா, மிகுதி ஏழு கோத்திரத்தாருக்கும் உரிய நிலத்தைச் சீட்டுப்போட்டுப் பங்கிட்டு, அப்பிரதேசங்களில் போய்க் குடியேறும்படி அறிவுறுத்தினான்.

18:11-19:48. மிகுதி ஏழு கோத்திரத்திற்கும் பங்கிடப்பட்ட நிலத்தின் விபரம். மக்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட பிரதேசங்களில் இருந்த கானானியரைத் துரத்தி தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்ளவேண்டியவர்களாக இருந்தார்கள்.

19:49-51. சகல கோத்திரங்களுக்கும் தேசத்தைப் பங்கிட்ட பின்னர் யோசுவாவுக்கான பகுதி கொடுக்கப்பட்டது. தலைவனுக்கே முதலாவது பங்கு கொடுக்கப்படவேண்டும் என்னும் உலக நிலைக்கு முரணாக யோசுவா தனக்கு முதலிடம் கொடுக்கப்பட வேண்டும் என்று நினைக்கவில்லை. அத்தோடு அவன் தனக்கு சிறப்பான இடம் கிடைக்கவேண்டும் என்றும் கூறவில்லை.

20:1-9. தற்செயலாய் நேர்ந்த ஒரு கொலையில், பழிவாங்கும் எண்ணத்துடன் இருப்பவர்களிடமிருந்து மனிதர் தப்பித்துக் கொள்வதற்கான அடைக்கலப் பட்டணங்கள் குறிக்கப்பட்டன. இத்தகைய பட்டணங்கள் பற்றி யாத்திராகமம் 21:12-13, எண்ணாகமம் 35:6-34, உபாகமம் 19:1-14ல் விளக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London

குறிக்கப்பட்ட பட்டணங்களின் விபரம் இவ்வதிகாரத்தில் உள்ளது. எனினும் திட்டமிட்டு செய்யப்படும் கொலைகளுக்கு இத்தகைய அடைக்கலப் பட்டணங்கள் கொடுக்கப்பட வில்லை (எண்.35:9-15ஐ எண்.35:16-21உடன் ஒப்பிடவும்). கொலை செய்யப்படுகிறவனு டைய உறவினர்கள் உடனடியாகக் கொலையாளியை அழிக்க முற்படுவதனால், கொலை தற்செயலாக நடைபெற்றதாக, அல்லது ஒரு விபத்தாக இருக்கும்போது, குறிப்பிட்ட மனிதனுக்குப் பாதுகாப்பு கொடுப்பதற்காக ஆறு அடைக்கலப் பட்டணங்கள் உருவாக்கப்பட்டன. அடைக்கலப் பட்டணத்திற்குள் ஓடிவந்தவன் நகர மூப்பர்களிடம் நடந்ததை விபரமாகச் சொல்லவேண்டும். நகர மூப்பர்களே அக்காலத்தில் நீதிபதிகளாகச் செயற்பட்டனர் (யோபு.29:7, உபா.21:19).

21:1-42. லேவியர்கள் குடியிருப்பதற்கான பட்டணங்கள் கொடுக்கப்பட்டன. இதுபற்றி மோசே ஏற்கனவே அறிவுறுத்தல்கள் கொடுத்திருந்தார் (எண்.35:1-8). இதன்படி லேவியர்களுக்கு 48 பட்டணங்கள் கொடுக்கப்பட்டன (21:42).




Map. 7. The Levitical Cities


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London

1:43-45. தேசம் பங்கிட்டப்பட விபரங்களை எழுதிய பின்னர், ஒரு முடிவுரையாக இவ்வசங்கள் உள்ளன. இதில், தேவன் தாம் கொடுத்த வாக்குத்தத்தத்திற்கு உண்மையுள்ளவராயிருந்துள்ளது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனினும், இச்சந்தர்ப்பத்தில் தேவன் அபிரகாமுக்கு வாக்களித்த முழு பிரதேசமும் (ஆதி.15:18-21) இஸ்ரவேலருக்கு கொடுக்கப்பட்டவில்லை. பிற்காலத்தில் இஸ்ரவேல் மக்கள் இவற்றைச் சுதந்தரித்தனர். (ஆமோ.9:14-15). ஆனால், இங்கு எண்ணாகமம் 34ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள் பிரதேசங்களையே இஸ்ரவேல் மக்கள் சுதந்தரித்தனர்.




Map 8. Area Actually Settled by Israelites


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London

## முடிவுரை: இறுதிச்சம்பவங்கள் 22:1-24:33

22:1-8. தேசம் முழுவதும் பங்கிடப்பட்ட பின்னர், யோர்தானுக்குக் கிழக்குப் பகுதியைச் சுதந்தரித்துக்கொண்டவர்களை யோசுவா தேவனுடைய கட்டளைகளைக் கைக்கொண்டு வாழும்படியான அறிவுறுத்தலுடன் அனுப்பிவைத்தான்.

22:9-11. யோர்த்தானுக்குக் கிழக்குப் பக்கத்தைச் சுதந்தரித்தவர்கள், சீலோவிலிருந்து புறப்பட்டு யோர்த்தான் நதிக்கரையைச் சென்றடைந்போது, தாங்கள் ஏனைய கோத்திரத்தாரிடமிருந்து பிரிந்து செல்கின்றோம் என்னும் உணர்வு அவர்களுக்கு ஏற்பட்டது. இதனால், அவர்கள் ஆற்றைக் கடந்து மறுகரைக்குச் செல்வதற்கு முன்னர், நதியின் மேற்குக் கரையில் நதியின் கிழக்குப்பகுதியிலிருந்து பார்க்கக்கூடிய அளவுக்கு பெயரியதோர் பீடத்தைக் கட்டினார்கள். யோர்தான் நதிக்கு இரு பக்கத்திலும் உள்ள மலைகள் 2000 அடிகள் வரை உயரமானவையாகவும், யோர்தான் நதிப்பள்ளத்தாக்கு 5 முதல் 13 மைல்கள வரை அகலமானதாகவும் இருந்தது.

22:12-20. பீடத்தைக் கட்டியவர்களுடைய செயல் ஏனைய கோத்திரத்தினரால் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டது. நதிக்கு இரு பக்கத்திலும் இருப்பவர்கள் ஐக்கியமாக இருப்பதற்கான அடையாளமாகக் கட்டப்பட்ட பீடத்தை, அவர்கள் தேவனைவிட்டு வழிவிலகிப்போகும் செயலாகக் கருதினார்கள். அதாவது அவர்கள் சீலோவில் இருக்கும் கர்த்தருடைய அசரிப்புக் கூடாரத்திற்குப் பதிலாக வேறொரு பலிபீடத்தைக் கட்டுகிறார்கள் என்னும் எண்ணத்துடன் அவர்களுடன் யுத்தத்திற்குச் சென்றனர். இது லேவியராகம் 17:8-9ன் கட்டளையை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்ட முடிவாக உள்ளது. மேலும் யுத்தத்தில் அலுத்துப்போயிருந்த மக்கள் தேவனுக்காக வைராக்கியம் கொண்டவர்களாக மாறினார்கள். தேவனுடைய சத்தியத்தின்மீது இத்தகைய வைராக்கியம் தற்கால கிறிஸ்தவர்களுக்கு இருக்கவேண்டியது அவசியம். எனினும், இத்தகைய வைராக்கியம் ஞானத்துடன் செயல்படவேண்டியது அவசியம்.

22:21-29. அவசரப்பட்டுத் தங்கள் மீது குற்றம் சாட்டுவதாக பீடத்தைக் கட்டிய கோத்திரத்தினர் தெரிவித்தனர். எனினும், இவர்கள் தங்களைக் குற்றம் சாட்டியவர்களைப்போல கோபத்துடன் பதிலளிக்காமல், அமைதியாகத் தங்களுடைய நிலைமையை விளக்கிக் கூறினார்கள். அநியாயமாகக் குற்றஞ்சாட்டப்படும் போது இவ்விதமாகவே நாமும் பொறுமையுடன் பேசவேண்டியது அவசியம். (நீதி.15:11). பூகோள ரீதியாகத் தாங்கள் பிரிந்திருப்பதினால், எதிர்கால சந்ததியினர் தங்களைத் தனிமைப்படுத்திக்கொள்ளக்கூடாது என்பதற்காகவே தாங்கள் பீடத்தைக் கட்டியதாக அவர்கள் தெரிவித்தனர். இது ஒரு நினைவு ஸ்தூபியாகக் கட்டப்பட்டதே தவிர வழிபாட்டுக்காக அல்ல என்பதை அவர்கள் தெளிவுபடுத்தினார்கள். எனினும், பீடம் கட்டப்பட்டது தேவையற்றதொன்றாகவே இருந்தது. ஏனெனில் இஸ்ரவேலின் ஆண்கள் அனைவரும் வருஷத்திற்கு மூன்று தடவைகள் ஆசரிப்புக்கூடாரத்திற்கு வரும்படி தேவன் கட்டளையிட்டிருந்தார் (யாத்.23:17). எனவே, பீடத்தைக் கட்டியவர்கள் நினைத்த விதமான பிரிவு ஏற்படுவதற்கு சாத்தியமில்லை. நாம் உணர்வுகளின்படி அல்ல, தேவனுடைய வார்த்தையின்படியே செயல்பட வேண்டும் என்பதற்கு இச்சம்பவம் சிறந்த உதாரணமாக உள்ளது. மேலும், பீடத்தைக் கட்டியவர்கள் எதற்காக இதைச் செய்கிறார்கள் என்பதை அறியாத நிலையில் அவசரப்பட்டு தவறான முடிவுக்கு வந்தவர்களைப்போல நாமும் மற்றவர்களது செயல்களுக்கான காரணங்களை அறியாமல் மேலோட்டமாக அவற்றைப் பார்த்து அவர்களை நியாயந் தீர்க்க முற்படக்கூடாது. மேலும், மனந்திறந்து காரியத்தைப் பேசும்போது தப்பபிப்பிராயங்களை நீக்கக்கூடிய சூழ்நிலை உருவாகும் என்பதையும் இச்சம்பவம் அறியத்தருகின்றது.

23:1-2428 யோசுவாவின் இறுதி உரை. தேவன் இதுவரை செய்த காரியங்களை யோசுவா விபரித்துக் கூறினான். தேவன் எவ்வாறு தம்முடைய வாக்குத்தத்தத்திற்கு உண்மையுள்ளவராக இருந்துள்ளார் என்பதையும் யோசுவா சுட்டிக்காட்டினான். இஸ்ரவேல் மக்கள் மத்தியில் கானானியர்கள் இன்னும் குடியிருந்தது யோசுவாவிற்கு அதிக கவலையை ஏற்படுத்தியது. இதனால் அவர்களுடைய வாழ்க்கை முறையைப் பின்பற்ற வேண்டாம் என்றும், அவர்களுடன் திருமண உறவுகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டாம் என்றும் யோசுவா கட்டளையிட்டான். குறிப்பாக, மக்கள் நியாயப்பிரமாணக் கட்டளைகளைக் கைக்கொண்டு வாழவேண்டியவர்களாக இருந்தனர். தேவன்


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London

யோசுவாவைத் தலைவனாக்கியபோது கொடுத்த இவ்வறிவுறுத்தலை இப்போது யோசுவா இஸ்ரவேலின் தலைவர்களுக்கு கொடுத்தான் (23:6). மக்களும் தாங்கள் நியாயப்பிரமாண வார்த்தைகளின்படி வாழ்வதாக உறுதியளித்தனர்.

24:29-33. இப்பகுதி யோசுவாவின் புத்தகத்தைத் தொகுத்து வெளியிட்டவர் எழுதிய பிற்சேர்க்கையாக உள்ளது. இதில் மூன்று மனிதர்களுடைய அடக்க விபரம் உள்ளது.




Map 6. The Tribal Divisions


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London

© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London

© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London